2016 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சேகர், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

குடமுழுக்கு

***1849—திரு. வி. சேகர்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டை அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலில் திருப்பணி செய்வதற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளன. திருப்பணிகளுக்கு உபயதாரர்கள் கிடைக்கப்பெற்றவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் திருப்பணிகள் தொடங்கப்பட்டு, திருக்குடமுழுக்கு நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சேகர் அவர்கள்.*

திரு. வி. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயம்தோறும் அன்னதானம் வழங்கும் அன்னபூரணி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்ச் சமூகத்தை மேம்படுத்துவதற்காகவே தவ வாழ்வு வாழ்ந்துவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி, மாட்சிமை தங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

[2016 ஆகஸ்ட் 23

எனது தொகுதியான பட்டுக்கோட்டை நகரில் அமைந்திருக்கும் அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா என்ற என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன். எனது தொகுதியில், கறம்பயம் கிராமத்தில் இருக்கும் அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலில் ஏற்கெனவே அரசின் பரிசீலனையில் இருந்துவரும் திருமண மண்டபம் கட்டும் திட்டத்தை விரைந்து செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, தமிழகத்தின் விடிவெள்ளியாகத் திகழும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, உரிய நிதி ஆதாரம் பெற்று, மேற்படி திருமண மண்டபத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று செய்து கொடுக்க அரசு முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]